812

திரிசிரபுரம்
விஸ்வப்பிரம்ஹவம்ஸத்தாரின்
சமாதான உடன்படிக்கை.

திருச்சிராப்பள்ளி:
ஜனானுகூல அச்சுக்கூடம்.

—

1923.

—

...ணா நான்கு

24 FEB 1923
Q2
N23
176936.

உ

ஸ்ரீவிராட் விஸ்வேஸ்வரர் துணை

25 FEB 1923

திரிசிரபுரம்

விஸ்வப்பிரம்ஹவம்ஸத்தினரின்

சமாதான உடன்படிக்கை.

ஸ்ரீ அகண்ட பரிபூர்ண ஸச்சிதாநந்த சற்குரு
மூர்த்திகளாகிய ஸ்ரீ பூலோக கைலாஸ
சிதம்பரமாடாதீஸ்வர ஸ்ரீமத் கமல
மூர்த்தி மௌனகுரு ஸ்வாமி
அவர்கள் திவ்ய சந்நி
தானத்திற்கு

இதனடியிற் கையொப்பங்களிட்ட நாங்கள்
யாவரும் வேதோக்த நமஸ்காரம்
புரிந்து தெரிவித்துக்கொள்ளும்
விண்ணப்பம் என்ன
வென்றல்

1. நமது பஞ்சப் பிர்ம்ஹ வமிசத்தினருக்குச் சொந்தமான திருச்சினாப்பள்ளிக் கோட்டை பெரிய கம்மாளத் தெருவிலிருக்கும்' ஸ்ரீ காளிகாபரமேஸ்வரி என்னும் ஸ்ரீ காமாக்ஷி அம்மன் தேவஸ்தானத்தில் சுமார் 4, 5, வருஷத்திற்குமுன்பு நடைபெற்ற நவராத்திரி உத்ஸவ காலத்தில் தட்டார வகுப்பு உபயமாகிய விஜயதசமியன்று அம்பாளை குதிரை வாகனத்தில் எழுந்தருளச்செய்து அம்புபோட வெளியில் புரப்பாடான விஷயத்தில் சில தகரார்களேற்பட்டு அது சம்பந்தமாக

126936

2. ௸ கோவில் மானேஜர்களாகிய. ரா. சுப்பிரமண்ய ஆச்சாரியார். 1. மு. நல்லய்யப் பத்தர் 2. இவர்கள் வகையறாப்பேர்களுக்கும். விஸ்வக்ஞன வகுப்பு பெரியதனம். R. சாமி ஆச்சாரியார். 1. ௸ காரியஸ்தானம் T. A. முத்துகிருஷ்ண ஆச்சாரியார் 2. இவர்கள் வகையறாப் பேர்களுக்கும் திருச்சி டவுன் சப் மேஜிஸ்திரேட் கோர்ட்டு மூல்யமாய் சில நடவடிக்கைகள் நடந்தேறியதில்

3. ௸ டவுன் மேஜிஸ்திரேட் கோர்ட்டாரவர்களால் உபய கக்ஷியினர்களையும் தீர விசாரிக்கப் பட்டதின்பேரில் இரு கக்ஷியினர்களும் சமாதானமாகி வொன்றுசேர்ந்து ௸ தேவஸ்தானத்தில் நடைபெற வேண்டிய உத்ஸவாதிகளை நடத்த வேண்டுமே யன்றி சமாதானமாகாமல் ௸ தேவஸ்தானத்தின் உத்ஸவங்களை ஒருவரும் நடத்தப்படாதென்றும் தீர்மானித்து விட்டபடியால்

4. அது முதல் ௸ தேவஸ்தானத்தில் நடைபெறவேண்டிய உத்ஸவங்கள் நடைபெறாமல் தடைபெற்றிருந்தபடியால் நமது ஜாதியின் மகுத்துவத்தின் பெருமை குறைவுபட்டுப் போய்விட்டது.

5. இத்தியாதி விஷயங்களையும் உபய கக்ஷினர்களாகிய நாங்கள் யோஜித்து நன்மையையும் தர்ம காரியங்கள் விருத்தியாக வேண்டியதையும் உத்தேசித்து நம் ஜாதியார்களாகிய முன்னோர்களால் நடத்தி வந்த வழக்கப்படி முறைகள் தவறாமல் நடந்து வருவதாக ஒப்புக்கொண்டு அடியிற் தெரிவித்திருக்கின்ற விஷயங்களை அங்கீகரித்து சமாதானமாகிவிட்டோம்.

92
A123

6. இனி முக்கியமாக நடைபெற வேண்டிய விஷயங்களாவன: ஷை தேவஸ்தான மானேஜர்களில் ஒருவராகிய ரா. சுப்பிரமண்ய ஆச்சாரியாரவர்கள் விண்ணுலகம் சென்று விட்டபடியால் அவர்கள் ஸ்தானத்திற்கு பதிலாக அதே வகுப்பில் ஒருவரை தெரிந்தெடுத்து மானேஜராக நியமிக்கவேண்டுமென்றும் அது சமயம் எந்தெந்த வகுப்புகளுக்கு வேண்டிய உத்யோகஸ்தர்களை நியமித்துக்கொள்வதென்றும்,

7. ஒவ்வொரு வருஷத்திய புரட்டாசி மாதங்களில் நடைபெறும் நவராத்திரி உத்ஸவங்களில் வரிசைக் கிரமமாக நடத்தவேண்டிய விபரமாவது

8. முதல் 1, 2 தினங்களில், த்வஷ்ட வகுப்பினர் ரெக்ஷாபந்தன முதலானது செய்துகொண்டு உபயம் நடத்துவதென்றும்

3, 4 தினங்களில் மனு வகுப்பினர்கள் உபயம்.

5, 6 தினங்களில் மய வகுப்பினர்கள் உபயம்.

7, 8 தினங்களில் சில்பமென்னும் காசிப்பாளையத்தார் உபயம்.

9, 10 தினங்களில் விஸ்வக்ஞன வகுப்பினர்களின் உபயம்.

9. ஷை ஐந்து வகுப்பினர்களும் மேலே தெரிவித்திருக்கின்ற கிரமப்படி உபயங்களை நடத்திவரவேண்டியதோடும், தட்டார வகுப்பாருக்குறிய உபயத்தில் பத்தாவது தினமாகிய விஜயதசமியன்று ஷையார்கள் ஸ்ரீ காமாக்ஷி அம்மனை குதிரை வாகனத்தில் எழுந்தருளச்செய்து தேவஸ்தானத்தினின்று புரப்பாடாகி

குஜிலித்தெரு மார்க்கமாய் சின்ன கம்மாளத்தெருவாகச் சென்று கள்ளத்தெரு மார்க்கமாய் காசிப்பாளையத் தெருவுக்கு வந்து அவ்விடமிருக்கின்ற நமதுவிநாயகர் தேவஸ்தானத்தின் எதிரில் அம்புபோட்டதின் பின்பு பெரிய பட்டுநூல்காரத்தெரு மார்க்கம் பெரிய கம்மாளத்தெரு வந்து தேவஸ்தானத்தில் அமரச்செய்வதென்றும்,

10. ஒவ்வொரு வருஷத்திய மாசி மாதத்தில் நடைபெறவேண்டிய பிர்ம்ம உத்ஸவமென்ற தேர் உத்ஸவ காலத்தில் உபயக்காரர்கள் நடத்தவேண்டிய முறைகளாவன

1, 2 நாள் த்வஷ்ட வகுப்பினர்கள் பிரதமத்தில் ரக்ஷாபந்தனம் புரிந்து உபயம் நடத்தவும்.
3, 4 நாள் மனு வகுப்பினர்கள் உபயம்.
5, 6 நாள் மய வகுப்பினர்கள் உபயம்.
7, 8 நாள் சில்பமென்னும், காசிப்பாளையத்தார் உபயம்.
9, 10 நாள் விஸ்வக்ஞர் வகுப்பினர்கள் உபயம்.

ஷை ஐந்து வகுப்பினர்களும் அவரவர்கள் மேலே தெரிவித்திருக்கின்ற கிரமப்படி உபயங்களை ஒவ்வொரு தினமும், காலை மாலை இரண்டு நேரங்களிலும் ஸ்ரீ அம்பாளை அலங்கரித்து தேவஸ்தானத்தினின்று புறப்பாடாகி பெரிய கம்மாளத்தெரு மார்க்கமாக வந்து மார்கட்டு கமான் வழியாக மட்டக்காரத்தெரு வழியாக மடாவழா சுற்றிவந்த பின்பு உபயக்காரர்களின் விருப்பத்தின்படி ஷை அம்பாளைக் கொண்டுபோகவேண்டுமானால் சுசிகரமற்ற தெரு மத்தியிலும் திண்ணைகளி

லும் அமர்த்தாமல் பொதுவாகிய தேவஸ்தான மண்டப முதலான நாகரீகமுள்ள இடங்களில் அமரச்செய்து சகல அமிசமும் நடத்தி தீவட்டி மத்தாப்பு வெளிச்சத் துடன் புரப்பாடாகி பெரிய கம்மாளத்தெரு மார்க்க மாக தேவஸ்தானம் கொண்டுவந்து சேர்க்கவேண்டிய தென்றும்,

11. தட்டார வகுப்பினருடைய உபயமாகிய 9, 10 தினங்களில் பத்தாவது தினமாகிய தேர் உத்ஸவத் தினத்தன்று யாவத்திராளும் மரியலோடிருந்து ஷ தேர் உத்ஸவத்தை மங்களகரமாக நடப்பித்துவைப்ப தோடும்

12. ஒவ்வொரு வகுப்புக்காரர்களும் தங்கள் தங்கள் உபயத்திற்கு செல்லுமான சிலவு துகைகளை கோவில் மானேஜர் வகையரு பேர்களிடம் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளவேண்டியதென்றும்,

துகைகளைப்பெற்ற மானேஜர் வகையருக்காரர்கள் சிரத்தையுடன் ஷ உபயத்தை சிறப்பாக நடத்தி வைத்து மஹா ஜனங்களுக்கும் உபயக்காரர்களுக்கும் கிரமப்படி சிலவுகள் செய்து பரிவட்ட முதலான மரியா தைகளைச் செய்வித்து மங்களகரமாக அனுப்பிவைக்க வேண்டியதென்றும்,

13. ஷ மானேஜர்கள் முக்கியமாக கவனித்துச் செய்யவேண்டிய கடமைகளாவன ஷ தேவஸ்தானத் திற்குச் சொந்தமான ஸ்தாவர சங்கம சொத்துக் களின்னதிருக்கிறதென்று தெரிந்துகொண்டதின் பின்பு ஷ சொத்துக்களின் வரவு சிலவு கணக்குகளைப் பார்த்து வரும்படியாக, தக்க ஓர் திறமை வாய்ந்த

கணக்கப்பிள்ளையைத் தெரிந்தெடுத்து சம்பளத்திற் கமர்த்தி நாளது வரையில் அம்பாளுர்கு ஏற்பட்டிருகின்ற, ஸ்தாவரசங்கம சொத்துக்களின்னதென்பதை விபரமாக புஸ்தகங்களில் பதிந்தும், வரவு சிலவு கணக்கை ஒழுங்காய்ப்பதிந்து வரச்செய்து அவ்விதம்பதிந்து வருவதை அந்தந்த மாத கடைசியில் ஷை மானேஜர் வகையறாப்பேர்களால் பரிசோதித்துப் பார்த்து வர வேண்டியதென்றும்,

14. ஷை மானேஜர் வகைராப்பேர்கள் 6 மாதத்திற்கு ஒருமுறையாவது ஷை வரவு சிலவு கணக்குகளை மஹா ஜனங்களுக்கு ஸ்பஷ்டமாக காண்பித்து சந்தோஷமடையச் செய்யவேண்டுமென்றும்,

15. தேவஸ்தான சம்பந்தமாக ஏற்படும் கோர்ட்டு நடவடிக்கை முதலான சிலவுகளுக்கு ஷை மானேஜர்கள் வகுப்புத்தலைவர்கள், காரியஸ்தர்கள், சம்மதத்தை அனுசரித்து ஷை கோவில் பண்டிலிருந்து சிலவு செய்ய வேண்டியதென்றும்,

16. தற்காலம் நடைபெற்றுவரும் திருவானைக்காவலில் நம்வமிசத்தினர்களுக்குப் பாத்தியமான ஐந்தாம் திருவிழாவாகிய ரிஷபவாகன மண்டப விஷயமாய் மானேஜ்மெண்டு தகரார்பட்டு நடைபெற்றுவருகிற கோர்ட்டு சிலவுகளுக்கு ஷை தேவஸ்தான பண்டில் சிலவு செய்து வந்ததைப்போல் ஷை வியாஜ்யம் முடிவு பெறும் வரையில் அதற்காக நேரிடும் சிலவுகளை மாத்திரம் ஷை கோவில் பண்டிலிருந்து சிலவு செய்துகொள்வதென்றும்,

17. ஷை கோர்ட்டு மூல்யமாக ஸ்தாபிக்கப்படும் மானேஜர்களுடன் நாம் யாவரும் சேர்ந்து ஒத்துமை யுடன் ஷை மண்டபப்படியை மங்களகரமாக நடத்தி வர வேண்டுமென்றும்,

18. ஷை காமாக்ஷி அம்மாள் தேவஸ்தானத்திற் காக கிரயத்திற்கு வாங்கியிருக்கின்ற கடைக்காக ஷை மானேஜர் மு. நல்லய்ய பத்தர் அவர்கள் ஜீயர் செட்டி யார் வகையருப்பேர்களிடம் நோட்டேபாண்டு எழுதிக் கொடுத்திருக்கின்ற துகைகளை தேவஸ்தான பண்டிலி ருந்து ஷை கடனை தீர்த்துவிடவேண்டியதென்றும்,

19. கோவில் சம்பந்தமாகவும், வகுப்புகள் சம்பந்த மாகவும், ஏற்படும் தகரூர் முதலான விஷயங்களைப்பற்றி நமது முன்னோர்கள் வழக்கப்படி ஷை மானேஜர்களும் வகுப்பு தலைவர்கள் முதலானவர்களால் சீர்திருத்தம் செய்து கொள்ளவேண்டியதென்றும்,

20. 1910-ஞு முதல் நாளதுவரையில், R. சாமி ஆச்சாரியார், T. A. முத்துகிருஷ்ண ஆச்சாரியாரிவர் கள் வகைராப் பேர்களால் நடைபெற்றுவருகிற விஸ்வப் பிர்ம்ஹ மஹாஜன ஸெண்ட்ரல் சபை மூல்யமாய் நமது விஸ்வகர்ம ஜாதியார்கள் முன்னேற்றமடைய வேண்டிய விஷயங்களைப்பற்றி வழக்கம்போல் மீட்டிங்குசெய்து சமயோஜிதம்போல் கவர்ன்மெண்டு மூல்யமாகவும் மற்றெந்த மூல்யமாகவும் சாதகங்கள் அடையவேண் டிய விஷயங்களில் பிரவேசித்து சீர்திருத்தம் செய்து வரவேண்டியதென்றும்,

அதைவிடுத்து ஷை ஸபையார்களால் ஷை தேவஸ் தான வகைராக்களுக்கும் மானேஜர் வகைராக்களுக்கும்

யாதொரு குதர்க்கங்கள் வாராமல் நடத்திவரவேண்டிய தென்றும்,

21. இத்தியாதி விஷயங்களையும் இருகக்ஷியினர் களும் நன்குணர்ந்து மேலே தெரிவித்திருக்கின்ற விஷ யங்களை அநுசரித்து நடந்து வருவதாகச் சம்மதித்துக் கொண்டு இந்த சமாதானமாகிய உடன்படிக்கையை ஸ்வாமிகள் சந்நிதானத்தில் கொடுத்திருக்கின்றபடியால்,

23. இத்தியாதி விஷயங்களையும் ஸ்வாமிகள் திரு வுளம்பற்றி அவ்வண்ணமே அருள்புரியும்படியாய் நமஸ் கரித்துக் கேட்டுக்கொள்ளுகிறோம்

1. மு. நல்லப்பபத்தர், (மானேஜர் ஐந்து வகுப்பு எஜமான்.)
2. R. சாமி ஆச்சாரி (விஸ்வக்ஞன வகுப்புப் பெரியதனம்.)
3. தி. அ. நீலகண்ட ஆச்சாரி, மானேஜரின் காரியஸ்தர்
4. பெ. கோபாலசாமிப் பத்தர், ஷை
5. T. A. முத்துகிருஷ்ண ஆச்சாரி.
6. தி. ரா. குமாரசாமிப் பத்தர்.
7. வீ. முத்துசாமிப் பத்தர்.
8. சி. அய்யாவுப் பத்தர்.
9. பா. மருதைப் பத்தர்.
10. முத்துவீராப் பத்தர்.
11. ரு. பொன்னம்பலாச்சாரி.
12. வீ. கருப்புசாமி ஆச்சாரி, (கர்ணம் கன்னிடயாம்பட்டி.)
13. வா. சிவராமசாமி ஆச்சாரி, எடத்தெரு.
14. அயிலாண்டாச்சாரி, ஷை
15. மா. நாருயணச்சாரி, ஷை

16. வீ. முத்துசாமி ஆச்சாரி.
17. பெ. தங்கய்ய ஆச்சாரி.
18. ந. சொக்கய்ய பத்தர்.
19. ஆ. மருதை ஆச்சாரி, (மனு வகுப்பு பெரியதனம்.)
20. ரா. மாரய்யப் பத்தர்.
21. ஆ. கோவிந்த செட்டியார், வெங்கலக்கடை கல்லுப்பட்டி.
22. கி. லெக்ஷமணப் பத்தர், தி. கோ. சின்ன கம்மாளத்தெரு.
23. வை. மருதையாச்சாரி.
24. கிருஷ்ணஞ்செட்டி.
25. ச. வெங்கிடேச ஆச்சாரி.
26. பருவதப்பத்தர்.
27. சே. வே. சூரியநாராயணாச்சாரி.
28. ஆ. தா. நாராயணசாமி ஆச்சாரி.
29. சு. முத்துக்கருப்ப ஆச்சாரி.
30. சே. ர. அழகாச்சாரி.
31. கு. ஆதிமூல ஆச்சாரி.
32. தி. பி. மருதை ஆச்சாரி.
33. தி. பெரியசாமி ஆச்சாரி.
34. K. Palanivelachari.
35. நா. நல்லயப்பத்தர்.
36. மா. தெக்ஷணாமூர்த்தி பத்தர்.
37. மகாதேவ ஆச்சாரி.
38. வை. முருகாச்சாரி.
39. பி. பஞ்சநத ஆச்சாரி.
40. தி. கொ. பொன்னுசாமி ஆச்சாரி.

176936
Q2
N23

41. வெங்கட்டையப்பத்தர்.
42. மருதை ஆச்சாரி.
43. ம. முருகனுச்சாரி.
44. த. ராமசாமி ஆச்சாரி.
45. அ. பழனிசாமி ஆச்சாரி.
46 ஷண்முக ஆச்சாரி.
47. ந. விஸ்வனாத ஆச்சாரி.
48. செ. லெக்ஷ்மணுச்சாரி.

ஸ்ரீ அகண்ட பரிபூரண ஸச்சிதாநந்த சற்குரு மூர்த்திகளாகிய ஸ்ரீ பூலோக கைலாஸ சிதம்பர மடாதீஸ்வர ஸ்ரீமத் கமலமூர்த்தி மௌனகுருஸ்வாமிகள் சந்நிதானத்தின்

தீர்மானம்.

திருச்சினுப்பள்ளிக் கோட்டை பெரிய கம்மாளத் தெருவிலிருக்கும் நமது பஞ்சப்பிர்ம்ஹ சந்ததியார்களுக்குச் சொந்தமாகிய ஸ்ரீ காளியம்மன் என்கிற ஸ்ரீ காமாக்ஷியம்மன் தேவஸ்தான மானேஜர்களுக்கும், ஐங்குல எஜமான்கள் வகுப்பு எஜமான்சள் காரியஸ்தானங்கள் முதலான மஹா ஜனங்களுக்கும் ஆஞ்ஞாபிப்பது யாதெனில்,

தாங்கள் யாவரும் ஒற்றுமையாகி, 1920ஹு நவம்பர்மீ 7உயில் ஸ்வாமிகள் சந்நிதானத்தில் கொடுத்த இராஜிநாமா உடன்படிக்கையில் ஆதி முதல் அந்தம் வரையில் கண்டிருக்கின்ற ஒவ்வொரு விஷயங்களையும் கவனித்து ஷை ஸ்ரீ காமாக்ஷி அம்மன் தேவஸ்தானத்தின் ஸ்தாவர சங்கம சொத்தின் தர்ம பரிபாலன விஷயத்தில் விர்த்தியாம்ஸமடையச்செய்து வருவதினும் ஷை அம்பாளுக்கு நடைபெறும் உத்ஸவங்

174936

களில் வழக்கம்போல் அவரவர்களுக்குரிய முறைப்படி தவருதலில்லாமல் ஒற்றுமையோடு நடத்திவரவேண்டு மென்றும்,

விஸ்வகர்ம ஜாதியார்கள் முன்னேற்றமடையச் செய்யவேண்டிய விஷயங்களை ஸபையார் மிகவும் கவனித்து கவர்ன்மெண்டு மூல்யமாகவும் மற்றெந்த மூல்யமாகவும் சீர்திருத்தி மேன்மையடையச் செய்வத வஸ்யமென்றும்,

இத்தியாதி விஷயங்களையும் கவனித்து ஒவ்வொரு அதிகாரிகளும் மஹா ஜனங்களும் படித்தரம் தவருமல் முன்னோர்கள் வழக்கப் பிரகாரம் ஒற்றுமையுடன் மெஜார்டி அங்கீகாரத்தை அனுசரித்து ஸ்ரீ விஸ்வேஸ்வரர் ஸ்ரீ காமாக்ஷி அம்மன் கிருபாகடாக்ஷத்தினல் நீங்கள் யாவரும் நீதி வழுவாமல் மங்களகரமாக நடத்தி வரும்படியாய் ஆக்ஞாபித்து உத்திரவு செய்திருக்கின்றது.

27—— 12
4—— 12
1096——1920

ஸ்வாமிகளின் கையொப்பம் சமஸ்கிருதத்தில் போடப்பட்டிருக்கிறது.

Jananookula Press, Trichinopoly.